**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ம் நாள் வியாழன்கிழமை

**<u>IA No.02/2025</u>**

**In**

**<u>O.S No.222/2023</u>**

1) வசந்தாள்,

2) கணேசன்,

3) மதி,

4) பாலாயி, **.....மனுதாரர்கள்/1,3,6,7 பிரதிவாதிகள்**

**//எதிர்//**

சுந்தரம் **.....எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/1,3,6,7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.திரவியம்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கோவிந்தராசு.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் மனுதாரர்கள்/1,3,6,7 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்:-</u>**

அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் மனுதாரருக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் எதிராக தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. தாவா சொத்து ஆதியில் சாத்தாயி மற்றும் வீரப்பன் ஆகியோர்களுக்கு

கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ள சொத்தாகும். அதன்பின்னிட்டு தாவா சொத்து புல எண்.266/7A, 266/7B, 266/7C, என உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புலஎண் 266/7A மொத்த விஸ்தீரணம் 10 செண்ட் இடத்தை மனுதாரர் வீரப்பன் மகன் ராமன் அவர்களிடம் கடந்த 06.06.2002 தேதியில் பதிவான கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றும், கடந்த 28.11.2023 தேதியில் தனது சகோதரியும், ஆறுமுகம் மனைவியுமான பாலாயி (7ம் பிரதிவாதி) என்பவரிடமிருந்து பாகபாத்திய விடுதலை பத்திரம் பெற்று அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்து இன்றுவரை தரிசாகவே உள்ளது.எதிர்மனுதாரர்/வாதி சம்மந்தம் இல்லாத நபர்களிடம் கிரையம் பெற்று இந்த பிரதிவாதியின் அனுபவத்தை தடை செய்ய எத்தனிக்கிறார். எனவே தாவா சொத்து தொடர்பாக மனுதாரர் கிரையம் பெற்றுள்ள ஆவணங்களுடன் வாதி கிரையம் பெற்ற ஆவணங்களை ஒப்பீடு செய்து, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் உதவியுடன் வழக்கு சொத்தை அளவை செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனு பாரா 2-ல் இந்த வாதி/எதிர்மனுதார் கோரியுள்ள பரிகாரம் மற்றும் அதன்படி உள்ள பரிகாரம் ஏற்கப்படுகிறது. புல எண்.266/7A மொத்த விஸ்தீர்ணம் 10 செண்ட் என்பது ஏற்கப்படுகிறது. ஆனால் இந்த சொத்தை கடந்த 6.6.2006-ம் தேதியில் ராமன் என்பவரிடம் இந்த மனுதாரர் கிரையம் பெற்றதாகவும் அதன்பின்பு 28.11.2023- தேதி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் பெற்றதாகவும் சொல்லியுள்ளது உண்மைக்குப்புறம்பான தகவல் ஆகும். இந்த ஆவணம் ஒரு போர்ஜரியான ஆவணம் ஆகும். தாவா சொத்து இன்றுவரை தரிசாக இருந்து வருகிறது என்று சொல்லியுள்ளது தவறு. இந்த எதிர்மனுதாரர்/வாதி சம்மந்தம் இல்லாத நபர்கள் கிரையம் வாங்கியதாகவும், இந்த பிரதிவாதியின் அனுபவத்தை தடை செய்ய எத்தணிப்பதாகவும், அதனால் மனுதாரர் மற்றும் இந்த வாதி கிரையம் பெற்ற ஆவணங்களை ஒப்பிட்டு அளவை செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என பரிகாரம் கேட்டு மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. இந்த வழக்கு சொத்து வெள்ளையன் மகன் வீரப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்தது அந்த சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 26 செண்ட் ஆகும். பழைய புல எண் 266/7 ஆகும். இதில் 10 செண்ட் இடத்தை இந்த வாதியின் தகப்பனார் சுப்பையா மேற்கண்ட வீரப்பனிடமிருந்து கடந்த 8.6.1959-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். முறையான நான்கெல்கை கண்டு மேற்கண்ட கிரையம் பெறப்பட்டுள்ளது. வருவாய்துறை ஆவணங்களும் இந்த

வாதி/எதிர்மனுதார் வசம் இருந்து வருகிறது. தாவா சொத்தில் இந்த வாதியால் கட்டப்பட்ட கட்டிடம் உள்ளது. அதனுடைய கதவு எண்.6/95C ஆகும். வீட்டு வரி ரசீதும் உள்ளது. தேவையற்ற வகையில் இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதார் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். 2023-ம் ஆண்டிலிருந்து இந்த பிரதிவாதிகள் இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலதாமதப்படுத்தி வருகின்றனர், அனுபவத்தை நிரூபிக்க வேண்டும் என பரிகாரம் கேட்டு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோர சட்டத்தில் வழிவகை இல்லை. தாவா சொத்திற்கும் இந்த மனுதாருக்கும் எந்தவித தொடர்போ, உரிமையோ, அனுபோகமோ கிடையாது. பழித்தவரை பார்க்கலாம் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரிக் இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது தாவா சொத்து தொடர்பாக மனுதாரர்கள்/1,3,6,7 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ள ஆவணங்களுடன் வாதி கிரையம் பெற்ற ஆவணத்தை ஒப்பீடு செய்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் தாவா வழக்கில் பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி வருவதாகவும், அனுபவத்தினை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய முடியாது என்றும், மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது மனுவில் மனுதாரரின் மனு மற்றும் வழக்குரையில் தாவா சொத்தின் பூஸ்திதியில் அடையாளப்படுத்துவதில் சம்மந்தமாக பிரச்சனை இருப்பதாக கட்சி செய்யப்படவில்லை. மேலும் வழக்குரையில் கண்ட சொத்து விபரமும் மனுவில் கண்ட சொத்து விபரமும் ஒன்றாகவே உள்ளது. மேலும் மனுதாரர் தங்கள் மனுவில் வாதி பிரதிவாதி அனுபவத்தை தடை செய்ய எத்தனிப்பதாகவும், தாவா சொத்து இன்றுவரை தரிசாக உள்ளது என்றும் கட்சி செய்ததிலிருந்து இந்த மனு தாவா சொத்தின் சுவாதீனத்தை கண்டறிய தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மனு சொத்தின் சுவாதீனத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் கண்டறிய முடியாது என்பதற்கு பல முன்தீர்ப்புகள் உள்ளன. எனவே இம்மனு நிலைநிற்கதக்கதில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> :** இல்லை

**//உண்மை நகல்//**

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 02/2025**
**O.S.No. 222/2023**
**நாள். 24.04.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி**